2012 மே 10]

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

முற்பகல் 11-10

3. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்

(அ) விசைத்தறி நெசவாளர்களுக்கு மின் கட்டண சலுகை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் நான்கு அறிக்கைகளை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைக்கு அடுத்தபடியாக ஊரகப் பகுதி மக்களின் வாழ்வாதாரமாக விளங்குவதிலும், நாட்டின் ஏற்றுமதி வருவாயைப் பெருக்குவதிலும் முக்கியப் பங்கு வகிப்பது நெசவுத் தொழில். இப்படிப்பட்ட இன்றியமையாத் தொழிலான நெசவுத் தொழிலின் வளர்ச்சிக்கு எனது அரசு முன்னுரிமை அளித்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.*

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 30-3-2012 அன்று மின் கட்டண விகித மாற்றம் குறித்த தனது ஆணையை வெளியிட்டபோது, அதில் விவசாயிகள், விசைத்தறி நெசவாளர்கள், வீட்டு மின் பயனீட்டாளர்கள் உள்ளிட்டவர்களுக்கு 3,554 கோடியே 16 இலட்சம் ரூபாய் அளவுக்குக் கட்டணச் சலுகையை எனது தலைமையிலான அரசு வழங்கியிருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 740 கோடி ரூபாய்க்கான மானியத்தையும் இந்த மாமன்றத்திலே நான் அறிவித்தேன்.

இந்தக் கட்டணச் சலுகையின்படி, விசைத்தறி நெசவாளர்கள் தற்பொழுது இரு மாதங்களுக்குப் பயன்படுத்தும் முதல் 500 யூனிட்டுகளுக்குக் கட்டணம் ஏதும் செலுத்த வேண்டியதில்லை. 500 யூனிட்டுகளுக்குமேல் மின்சாரம் பயன்படுத்தும் விசைத்தறி நெசவாளர்கள் 501 யூனிட்டுகளிலிருந்து, ஒரு யூனிட்டுக்கு நான்கு ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும். அதாவது, முதல் 500 யூனிட்டுகள் வரை விசைத்தறி நெசவாளர்களுக்கு ஒரு யூனிட்டுக்கு 4 ரூபாய் 50 காசு என்று தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை

ஆணையம் கட்டணம் நிர்ணயித்திருந்தபோதிலும், அந்தக் கட்டணத்தை அரசே ஏற்று, அவர்களுக்குக் கட்டணமில்லா சலுகை வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) 500 யூனிட்டுகளுக்கு மேல் மின்சாரத்தைப் பயன்படுத்தும் விசைத்தறி நெசவாளர்களுக்கு, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் ஒரு யூனிட்டுக்கு 5 ரூபாய் என்று கட்டணம் விதித்திருந்த போதிலும், ஒரு யூனிட்டுக்கு ஒரு ரூபாய் மானியத்தை அரசு வழங்கி வருகிறது. அதாவது, அவர்களிடமிருந்து ஒரு யூனிட்டுக்கு நான்கு ரூபாய் மட்டுமே கட்டணமாக வசூலிக்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக, இந்த ஆண்டு விசைத்தறி நெசவாளர்களுக்கு மானியம் வழங்கும் வகையில், 153 கோடியே 15 இலட்சம் ரூபாயை எனது அரசு ஒதுக்கீடு செய்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

எனினும், தற்பொழுது செலுத்தப்பட வேண்டிய மின் கட்டணம் உயர் அளவாக உள்ளது என்றும், அது குறைக்கப்பட வேண்டும் என்றும் விசைத்தறி நெசவாளர்கள் கோரிக்கைகள் விடுத்துள்ளனர். இதனை வலியுறுத்தி கடந்த சில நாட்களாக வேலைநிறுத்தம் மேற்கொண்டுள்ளனர். விசைத்தறி நெசவாளர்களின் இந்தக் கோரிக்கைகளைக் கனிவுடன் பரிசீலித்த எனது அரசு, அவர்களுக்குக் கூடுதல் சலுகைகளை வழங்க தற்போது முடிவு எடுத்துள்ளது.

(1) இதன்படி, இரு மாதங்களுக்கு 500 யூனிட்டுகள்வரை பயன்படுத்தும் விசைத்தறி நெசவாளர்களுக்கான கட்டணமில்லாச் சலுகை தொடரும். இதனால் 69,476 விசைத்தறி மின் நுகர்வோர் பயனடைவர். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு யாரோ பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுபோன்று, உரையினிடையே பேசிக்கொண்டிருக்கும் பழக்கம் தொடருமானால், நான் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: (2) இரு மாதங்களுக்கு 501 முதல் 1,000 யூனிட்டுகள்வரை பயன்படுத்தும் உபயோகிப்பாளர்கள் தற்போதுள்ள கட்டணமான 4 ரூபாய்க்குப் பதிலாக, யூனிட் ஒன்றுக்கு 2 ரூபாய் மட்டும் செலுத்தினால் போதும். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, அவர்களுக்கு ஏற்கெனவே

2012 மே 10] *[செல்வி ஜெ ஜெயலலிதா]*

வழங்கப்பட்டுவரும் ஒரு ரூபாயுடன், கூடுதலாக யூனிட் ஒன்றிற்கு 2 ரூபாய் மானியம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இதன்மூலம் 24,171 விசைத்தறி மின் நுகர்வோர் பயனடைவார்கள்.

முற்பகல் 11-15

(3) இரு மாதங்களுக்கு 1,001 முதல் 1,500 யூனிட்டுகள் வரை பயன்படுத்தும் உபயோகிப்பாளர்கள் தற்போதுள்ள கட்டணமான நான்கு ரூபாய்க்குப் பதிலாக யூனிட் ஒன்றுக்கு மூன்று ரூபாய் மட்டுமே செலுத்தினால் போதும். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, அவர்களுக்கு ஏற்கெனவே யூனிட் ஒன்றிற்கு வழங்கப்பட்டுவரும் ஒரு ரூபாய் மானியத்துடன், கூடுதலாக ஒரு ரூபாய் மானியத்தை அரசு வழங்கும். இதன்மூலம் 9,297 விசைத்தறி மின் நுகர்வோர் பயனடைவார்கள்.

(4) இரு மாதங்களில் 1,500 யூனிட்டுகளுக்கும் அதிகமாக மின்சாரத்தைப் பயன்படுத்தும் 28,056 நெசவாளர்கள், தற்போது அனுபவித்துவரும் ஒரு ரூபாய் மானியத்தைத் தொடர்ந்து பெறுவார்கள். மேலும், முதல் 500 யூனிட்டுகள் கட்டணம் ஏதுமின்றியும், 501 முதல் 1,500 யூனிட்டுகள் வரை உள்ள பயன்பாட்டிற்கான சலுகைகளையும் பெறுவார்கள்.

(5) இந்தச் சலுகைகளின் காரணமாக 47 கோடியே 5 இலட்சம் ரூபாயைக் கூடுதல் மானியமாக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு தமிழக அரசு வழங்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

(6) இதுமட்டுமன்றி, நிலையான கட்டணமாக, மாதம் ஒன்றிற்கு, கிலோ வாட் ஒன்றுக்கு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்த கட்டணமான 50 ரூபாய் என்பது 30 ரூபாயாகக் குறைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக அரசு 12 கோடியே 64 இலட்சம் ரூபாயை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மானியமாக வழங்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னால் தற்போது அறிவிக்கப்பட்ட இந்தச் சலுகைகளின் காரணமாக விசைத்தறி பயனீட்டாளர்களுக்கான மானியத் தொகை ஆண்டொன்றுக்கு 153 கோடியே 15 இலட்சம் ரூபாயிலிருந்து 212 கோடியே 84 இலட்சம் ரூபாயாக அதிகரிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 மே 10

இந்த அதிகரிக்கப்பட்ட மானியத் தொகையான 59 கோடியே 69 இலட்சம் ரூபாயை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு எனது அரசு வழங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சலுகைகள்மூலம் இந்தத் தொழிலை நம்பியுள்ள நெசவாளர்கள் நலம் பெற்று வளமான வாழ்வு பெறுவார்கள் என்ற எனது நம்பிக்கையினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்கென மாநில ஆதார வள மையம் அமைத்தல் குறித்த முதல்மைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தின் ஓர் அங்கமாக மாற்றுத் திறனாளிகள் விளங்கும் வகையிலும், நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் மாற்றுத் திறனாளிகளும் பங்கேற்கும்வகையில், சமவாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும் வகையிலும், மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையிலும், அவர்களிடையே தன்னம்பிக்கையை வளரச் செய்யும் வகையிலும், அவர்களுக்கென பல கொள்கைகளை வகுத்தும், திட்டங்களைத் தீட்டியும் எனது அரசு செயல்படுத்தி வருகிறது.

மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகள், அதாவது கண் பார்வையற்றவர்கள், காது கேளாதவர்கள், வாய் பேச முடியாதவர்கள், உடல் ஊனமுற்றவர்கள், மன வளர்ச்சி குன்றியவர்கள், கற்றலில் குறைபாடு அதாவது Dyslexia, தசை சிதைவு Muscular dystrophy, மூளை முடக்குவாதம் Cerebral Palsy, டௌன் குறைபாடுகள் Down's Syndrome மற்றும் தற்புணை ஆழ்வு, அதாவது Autism உள்ள குழந்தைகளுக்கும், அவர்களின் இயலாத் தன்மையின் வகை மற்றும் பாதிப்பின் அளவு ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களை உள்ளடக்கிய கல்வியை, அதாவது Inclusive Education—ஐ எனது அரசு வழங்கி வருகிறது.

மாற்றுத் திறனாளிகளின் வாழ்வில் விடியல் பிறந்திட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், இதற்காக, சுமார் 41 கோடி ரூபாய் செலவில் 4,010 சிறப்பு ஆசிரியர்கள், 17 வாழ்வியல் திறன் பயிற்சி நிபுணர்கள் மற்றும் 719 தன்னார்வலர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.